நிதிநிலை அறிக்கையில் அதைப்பற்றிச் சொல்லவில்லை. ஆகவே, இதைப்பற்றிச் சொல்ல வேண்டும்.

ஆக, இப்படி இந்த நிதிநிலை அறிக்கையில் எதுவுமே இல்லாமல், இருப்பதையே சொல்லிக் கொண்டிருக்கும் நிதிநிலை அறிக்கையாக உள்ளது. அதனால், இந்த நிதிநிலை அறிக்கை பற்றி எல்லோரும் ஒன்று சொன்னார்கள். நான் எப்படிச் சொல்வது என்று எனக்குப் புரியவில்லை. ஏனென்று கேட்டால், எங்கள் தலைவரே, அதை ஒரு குப்பைக்கூளம் என்று சொல்லிவிட்டார். அதற்கே அவர்கள் கோபித்துக் கொண்டார்கள். நானும் அப்படி சொல்ல முடியவில்லை. எல்லோரும் நேருக்கு நேர் பார்த்து பழகிவிட்டோம். ஏதாவது சொன்னால், மனம் சங்கடப்படும் என்று பார்க்கிறேன். என்ன சொல்வது என்று தெரியவில்லை? But, I have an idea. Sir, I hope this is the last budget of the A.D.M.K. Government. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய *நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14-2-2019) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

பின்னர், பேரவை பிற்பகல் 2-29 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

50. 2017-2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள், காகித நிறுவனத்தின் முப்பத்தெட்டாவது ஆண்டறிக்கை. [*1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.*] *(தமிழ் மற்றும் ஆங்கிலம்)*

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

48. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தி மூன்றாவது அறிக்கை. (2018-2019)

49. பொதுக் கணக்குக் குழுவின் அறுபத்தி நான்காவது அறிக்கை. (2018-2019)